**கவனிக்க.-** *27.04.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III), பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(ஆ) ஆகிய பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1757 - 2012 මැයි මස 04 වැනි සිකුරාදා - 2012.05.04

*1757 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 862 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 864 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

**பன்னல பிரதேச சபை**

தொழில் வெற்றிடம்

வடமேல் மாகாண அரச சேவையில் பன்னல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்வரும் தொழில்களுக்கு சேர்த்துக் கொள்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய பன்னல பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. (பன்னலபிரதேச சபையில் தற்போதும் சேவையில் உள்ள சமயோசித/ தற்காலிக/ பயிலுனர்/ தொண்டர்களுக்கு முக்கிய இடமளிக்கப்படும்.

| தொழில் வகை | தொழில் எண்ணிக்கை | சம்பள முறைமை | கல்வித்தகைமை |
|---|---|---|---|
| 01. சுகாதார ஊழியர் | 04 | PL-1-2006 (IV) 11,730-120×10-130×10 145×10 - 160×12-ரூபா 17600 | குறைந்தது 8 ஆந்தரம் (9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |
| 2. காவலாளி | 01 | 11,730-120×10-130×10 145×10 - 160×12- ரூபா 17600 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் 2 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்ந்த) |
| 3. காரியாலய உதவியாளர் | 01 | 11,730-120×10-130×10 145×10 - 160×12- ரூபா 17600 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் 2 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்ந்த) |
| 4. சாரதி | 01 | PL-3-2006 (IV) 12,470-130×10-145×10 160×10 - 170×12- ரூபா 18,860 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் 2 தடவைக்கு மேற்படாத வகையில் 2 பாடங்களுக்கு திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல். |

5. **தேவையான ஏனைய தகைமைகள்.-**

- (அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்;
- (ஆ) விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல்;
- (இ) பன்னல பிரதேச சபை எல்லைக்குள் 03 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல். (வாக்குரிமைப் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்;
- (ஈ) விண்ணப்பதாரி சிறந்த ஒழுக்கமுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராயும் இருத்தல் ;
- (உ) தண்டனைக் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றம் மூலம் தண்டனைக்குரியவராய் இருத்தல் கூடாது.
- (ஊ) சாரதித் தொழில் தொடர்பாக ஆண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.

6. **தொழில்நுட்ப சேவைப் பிரிவுக்கு சேர்த்துக் கொள்ளல்:**

தொழில் : சாரதிச் சேவை III

***தேவையான தொழில்நுட்பத் திறன் அடைவு மட்டம்***

நிறை அந்தர் 34 க்கு மேல் கனரக மோட்டார் வாகனமும் கனரக டேலர் உட்பட பயணிகள் 32 க்கு மேல் கொண்டு செல்லக்கூடிய பேரூந்து வண்டி ஓட்டக்கூடிய மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் மூலம் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (A வகை சாரதி அனுமதிப்பத்திரம்).

**அனுபவம்.**- வாகனச் சாரதியாக 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (சேவைச் சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்).

7. **சேர்த்துக் கொள்ளும் முறைமை.**-நேர்முகப் பரீட்சைக்காக பங்குபற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து கல்வித்தகைமையும் வாய் மொழிப் பரீட்சையின் முடிவுகளின்படி சேர்த்துக் கொள்ளல் நிகழும்.

8. **விண்ணப்பம் தயாரித்தல்.-**

(1) விண்ணப்பதாரி இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி தயாரிக்கப்பட்டு 2012.05.31 அன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர்" பன்னல பிரதேச சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(2) விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடதுபக்கமேல் மூலையில் உரிய தொழிலைக் குறிப்பிட்டு "........................ தொழில் தொடர்பான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல்.

(3) விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் ;-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) பாடசாலை விலகல் சான்றிதழ்;
(ஈ) வசிப்பிடத்தை உறுதி செய்யும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (பிரதேச செயலாளர் அத்தாட்சிப்படுத்தி இருத்தல் வேண்டும்.)
(உ) அண்மையில் பெற்றுக் கொண்ட நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டு;
(ஊ) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

இவ்விண்ணப்பம் கோரியதன் பின்னர் அல்லது கோரும்போது அல்லது சேர்த்துக் கொள்ளல் அல்லது இச்சேர்த்துக் கொள்ளல் தாமதமாக்கல் அல்லது மாற்றுதல் அல்லதுஇவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தியமைத்தல் தொடர்பான பூரண அதிகாரம் பன்னல பிரதேச சபை செயலாளர் பாற்பட்டது.

கே. எம். பேமரத்ன,
செயலாளர்,
பன்னல பிரதேச சபை.

பன்னல பிரதேச சபை,
பன்னல.
2012.04.11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பன்னல பிரதேச சபையில் ................. பதவி**

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயர் :-----.

2. முதலெழுத்துக்களுக்குரிய பெயர் :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. கிராம அலுவலர் பிரிவு :-----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :-----.

6. மாவட்டம் :-----.

7. பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

9. பால் : (ஆண்/பெண்) :-----.

10. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

11. இலங்கைப் பிரசையாகுவது பரம்பரையினாலா ? பதிவினாலா ? :-----.

12. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

13. கல்வித் தகைமை :-
க. பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியெய்திய வருடமும் சுட்டெண்ணும் :-----.

| தொ.இலக்கம் | பாடம் | சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

14. தொழில் தகைமையும் வேறு தகைமைகளும் :-----.

15. நீர் தற்போதைக்கும் இப்பிரதேச சபையில் பதலீட்டு /அமைய சேவை செய்வதாயின் சேவைக்காலமும் விபரமும்; :-----.

அத்தொழிலின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீட்டு என) என்பது பற்றி : :-----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியென உறுதியுரைக்கின்றேன். இவ் ஆட்சேர்த்துக் கொள்ளல் ஒப்பந்தங்களுக்கமைய என்னால் சரியான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளனவெனவும். நியமனத்திற்கு முன்பு அல்லது பின்பு நிரூபிக்கப்படின் எவ்விதமான பிரதியீடும் பெறாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு கீழ்ப்படிகின்றேன் என்பது நான் அறிந்ததாகும்.

.............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

5-25

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## தும்பனே பிரதேச சபை

தும்பனே பிரதேசச் சபையின் நிருவாக எல்லையில் கலகெதர மற்றும் அரம்பேகட உப அலுவலக எல்லைக்குள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 134(1) ஆவது பிரிவின்படி தும்பனே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எல். எஸ். பீ. கிரிஹாகம,
தலைவர்,
தும்பனே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தும்பனே.
2012, மாச்சு 12.

**அட்டவணை**

1. **மெதவல வீதி:**

ஹேதெனிய நகரில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் எல்லையிலிருந்து திரு. பீ. ரணசிங்ஹ என்பவரது காணியை வலது பக்கமாவும், திரு. டபிள்யூ. ஜீ. அபேசிங்ஹ என்பவரது கடையை இடது பக்கமாகவும் குறித்த உடைமைகளை உள்ளடங்கும் வண்ணம் அவ்விடத்திலிருந்து 02 கிலோ மீற்றர் தூரம் செல்கையில் எதிர்கொள்ளும் திரு. ஈ. டபிள்யூ. என். கே. பஸ்நாயக்க என்பவரது வீட்டை இடது புறமாகவும்

திரு. சமரகோன் என்பவரது வீட்டை வலது புறமாகவும் கொண்ட குறித்த இரண்டு ஆதனங்களை உள்ளடக்கியதும், குறித்த பாதையின் நடு அச்சிலிருந்து இடது புறமாக 50 மீற்றரையும் வலது புறமாக 50 மீற்றரையும் உள்ளடக்கியதுமான பிரதசம் மெதவல வீதி என்ற புதிய மதிப்பீட்டுப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

2. ***பொக்காவல வீதி :***

குருநாகல், கண்டி வீதியில் அரம்பேகடை சந்தியிலிருந்து ஆரம்பித்து கிரிஹாகம சந்தி வரை பொக்காவல நோக்கிய 02 கிலோ மீற்றர் தூரம் உள்ளிட்ட குறித்த பாதையின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடக்கப்படும் பிரதேசம் பெபாக்காவல வீதி எனப் புதிய மதிப்பீட்டு வரிப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

3. ***கண்டி - குருநாகல் வீதி :***

குருநாகல்-கண்டி வீதியில் மதிப்பீட்டு இலக்கம் 144 ஐக்கொண்ட திரு. ஜயசேன என்பவரது வீட்டை வலது புறமாகவும் தற்போதைய மதிப்பீட்டு இலக்கம் 145 ஐக் கொண்ட திரு. ஜீ. டி. அல்விஸ் என்பவரது காணியையும், ஆனத்தையும் இடது புறமாகவும் எல்லையாகக் கொண்டு, கண்டி நோக்கி 2.2 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் மதிப்பீட்டு இலக்கம் 10 ஐக் கொண்ட திரு. கே. எம். ரத்நாயக்க என்பவரது வீட்டை இடது புறமாகவும், மதிப்பீட்டு இலக்கம் 03 ஐக் கொண்ட திரு. ஹேரத் என்பவரது வீட்டை வலது புறமாகவும் கொண்ட குறித்த ஆதனங்களது எல்லையிலிருந்து குறித்த பாதையின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடங்கும் கண்டி- குருநாகல் வீதி என்ற புதிய மதிப்பீட்டுப பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

4. ***நீதிமன்ற வீதியை நீடித்தல்:***

கண்டி-றம்புக்கணை வீதியில் கலகெதர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்துச் செல்லும் நீதிமன்ற வீதியில் மதிப்பீட்டு இலக்கம் 44 ஐக் கொண்ட திரு. டபிள்யூ. ஏ. பி. என். கே. எஸ். தென்னகோன் என்பவரது வீட்டை வலது புறமாகவும், மதிப்பீட்டு இலக்கம் 46 ஐக் கொண்ட திரு. டி. கே. பெரேரா என்பவரது வீட்டை இடது புறமாகவும் கொண்ட ஆதனங்களிலிருந்து 60 மீற்றர் தூரம் எதிர்நோக்கிய திரு. சுரஞ்சித் குணசேகர என்பவரது வீட்டை இடது புறமாகவும், திருமதி குசுமாவதி வீரசேகர என்பவரது வீட்டை வலது புறமாகவும் கொண்ட ஆதனங்களை உள்ளடக்கிய குறித்த பாதையின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் தூரம் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடங்கும் பிரதேசம் நீதிமன்ற வீதி எனப் புதிய மதிப்பீட்டு வரிப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

5. ***மல்பொலயாய வீதி:***

கண்டி-றம்புக்கணை வீதியில் கலகெதர பொது விளையாட்டு மைதானத்தின் எதிரிலிருந்து செல்லும் மல்பொலயாய வீதி, 490/3/ஏ என்ற மதிப்பீட்டு இலக்கம் கொண்ட திருமதி சித்தி ஸீனியா என்பவரது வீட்டை இடதுபுற எல்லயாகவும், 490/4 என்ற மதிப்பீட்டு இலக்கம் கொண்ட திரு. ஸமத் ஹாஜியாரின் வீட்டை வலதுபுற எல்லையாகவும் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் முன்னோக்கிச் செல்கையில் எதிர்கொள்ளும் வயல் வெளிக்குரிய நீரோடை வரையிலுள்ள குறித்த பாதையின் நடுஅச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடங்கும் பிரதேசம் மல்பொலயாய வீதி என்ற பெயரிட்டுப் புதிய மதிப்பீட்டு வரிப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

6. ***கவுடெல்ல முதல் மெதகொட சந்தி வரை (மெதகொட கவுடெல்ல வீதி) :***

கண்டி-றம்புக்கணை வீதியில் கவுடெல்ல பாலத்தின் ஆரம்ப எல்லையிலிருந்து றும்புக்கனை நோக்கி 1 1/2 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் எதிர்கொள்ளும் மெதவல பிரிவேனாவுக்குத் திரும்பும் சந்தி வரையுள்ள குறித்த பாதையின் நடுஅச்சிலிருந்து இடது புறமாக 50 மீற்றரும்,வலதுபுறமாக 50 மீற்றரும் உள்ளடங்கும் வகையில் கவுடெல்ல மெதகொட சந்தி வரை மதிப்பீட்டுப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

7. ***கொஹிலஎல்ல வீதி :***

கலகெதர மடிகே, றம்புக்கண வீதியில் மடிகே பள்ளி அருகாகச் செல்லும் கொஹிலஎல்ல வீதியின் ஆரம்ப எல்லை மடிகே பள்ளி மயானத்தின் இடது புறத்திலும், கொஹிலஎல்ல நோக்கிச் செல்லும் பாதையின் திரு. ஹசன் ரியாஸ் என்பவரது வீடு இடது புறத்திலும், திரு. எம். எச். எம். சத்தார் என்பவரது வீடு வலது புறத்திலும் கொண்டமைந்துள்ள குறித்த இரண்டு வீடுகளையும் உள்ளடக்கிய வீதியில் 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாதையின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடங்கும் பிரதேசமும், குறித்த வீதியின் திரு. எம். எஸ். எம். பதீர் என்பவரது வீட்டுடன் செல்லும் கொஹிலஎல்ல குறுக்குப்பாதை, கொஹிலஎல்ல பிரதான வீதியிலிருந்து ஆரம்பித்து 40 மீற்றர் எதிரே சென்றதும் எதிர்கொள்ளும் இடதுபுறத்தில் (மதிப்பீட்டு இலக்கம் 52/5) திரு. அப்துல் ஹமீத் என்பவரது வீட்டையும், வலது புறத்தில் (மதிப்பீட்டு இலக்கம் 52/3) திரு. ஏ. எம். முசம்மில் என்பவரது வீட்டையும் எல்லையாகக் கொண்ட, குறித்த வீதியின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறமாகவும், 50 மீற்றர் வலது புறமாகவும் உள்ளடங்கும் பிரதேசம் கொஹிலஎல்ல குறுக்கு வீதி எனவும், பிரதான வீதி கொஹிலஎல்ல வீதி எனவும் புதிய மதிப்பீட்டுப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.

*8. **நிதஹஸ் ஒழுங்கை:***

*கலகெதர மடிகே நம்புக்கண வீதியில் ஜப்பார் முஸ்லிம் வித்தியாலயத்தின் எதிரிலிருந்து செல்லும நிதஹஸ் ஒழுங்கையின் ஆரம்பம் மதிப்பீட்டு இலக்கம் 423/1 ஐக்கொண்ட திரு. கே. எம். என். ஏ. சத்தார் என்பவரது வீடு இடது புறமாகவும் மதிப்பீட்டு இலக்கம் 435 ஐக் கொண்ட திரு. யூ. ஏ. விமலசிரி சில்வா என்பவரது கராஜ் வலது புறமாகவும், அதிலிருந்து முன்னோக்கிய 210 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள திரு. ஈ. பி. பீ. நிஹால் ஆரியசிங்ஹ என்பவரது வீடு இடது புறமாகவும், திரு. அமீர் என்பவரது காணி வலது புறமாகவும், குறித்த இரண்டு ஆதனங்களும் உள்ளடங்கிய குறித்த பாதையின் நடு அச்சிலிருந்து 50 மீற்றர் இடது புறத்திலும், 50 மீற்றர் வலது புறத்திலும் உள்ளடங்கும் பிரதேசம் நிதஹஸ் ஒழுங்கை என்ற பெயரில் மதிப்பீட்டுப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.*

*9. **அக்கறே வீதி :***

*கலகெதர மடிகே நம்புக்கண வீதியில் ஜப்பார் முஸ்லிம் வித்தியாலயத்தின் அருகாகச் செல்லும் அக்கறே வீதியின் ஆரம்பம் திரு.கே. எம். ஏ. சத்தார் என்பவரது வீடு இடது புறத்தையும், ஜப்பார் முஸ்லிம் வித்தியாலயத்தின் வேலி வலது புறத்தையும், அதிலிருந்து 75 மீற்றர் முன்னோக்கிச் சென்றதும் எதிர்படும் திரு. ஏ. எல். சி. கருணாதிலக்க என்பவரது வீடு வலது புறத்தையும், திரு. அமீன் என்பவரது வீடு இடது புறத்தையும் கொண்டதாக அமைந்த இரண்டு வீடுகளையும் உள்ளடக்கிய குறித்த வீதியின் நடு அச்சிலிருந்து50 மீற்றர் இடது புறத்தையும், 50 மீற்றர் வலது புறத்தையும் உள்ளடக்கிய அக்கறே வீதி புதிய மதிப்பீட்டுப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படுவது.*

*அறிவித்தலை உறுதிப்படுத்துகின்றேன்.*

*5-43*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2012***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| மே | .. | வெள்ளி | 04.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2012 |
| | | வெள்ளி | 11.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2012 |
| | | வெள்ளி | 18.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2012 |
| | | வெள்ளி | 25.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2012 |
| யூன் | .. | வெள்ளி | 01.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2012 |
| | | வெள்ளி | 08.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2012 |
| | | வெள்ளி | 15.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2012 |
| | | வெள்ளி | 22.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2012 |
| | | வெள்ளி | 29.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2012 |
| யூலை | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*